1979 மார்ச் 10]

* வினா எண் 323—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய சர்வீஸ் கமிஷன் தேர்வுகளை மாநில மொழிகளில் நடத்துவதற்கு வகை செய்ய நமது அரசு மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(ஆ) 1955 ஆம் ஆண்டு இந்திய அரசு ஆட்சி மொழி கமிஷனை நிறுவியது. அப்போதிலிருந்து இவ்வரசு அனைத்து இந்திய பணிகளுக்கான தேர்வுகளுக்காக மத்திய தேர்வாணைக் குழுநடத்தும் தேர்வுகளுக்கு ஆங்கிலத்துடன், அரசியல் அமைப்பு சட்டத்தில் 8-வது அட்டவணையில் குறிப்பிட்டுள்ள மொழிகளிலும் அத்தேர்வுகளை எழுத அனுமதிக்கவேண்டும் என்று இடைவிடாது வற்புறுத்தி வந்துள்ளது. மீண்டும் 25—7—1978 அன்று இனி இவ்வரசு இந்திய அரசுக்கு இக்கருத்தை வலியுறுத்தி கடிதம் எழுதியது. இது குறித்து கோத்தாரி கமிஷனுடைய அறிக்கையை மத்திய தேர்வாணைக்குழு பரிசீலித்து வருவதாகவும் இன்னும் இப்பொருள் இந்திய அரசின் ஆய்வில் உள்ளது என்றும் இந்திய அரசு சென்ற ஆகஸ்டு திங்களில் தெரிவித்துள்ளது.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, விடைத்தாள்களை அவரவர் மொழிகளில் எழுதலாம் என்று 8-வது அட்டவணையில் குறிப்பிட்டுள்ள மொழிகளுக்கு உரிமை தரப்பட்டிருக்கிறது. ஆனால் கேள்வித்தாள்களை அந்தந்த மொழிகளில் வெளியிடுவது இயலாது என்று மத்திய அரசு தெரிவித்திருக்கிறது. அப்படி வெளியிட்டால் ரகசியம் வெளியாகிவிடும். மற்றவர்களுக்குத் தெரிந்துவிடும் என்று சொல்லுகிறார்கள். பிற மொழிகளில் கேள்வித் தாள்களை வெளியிட்டால் அதனால் ரகசியம் வெளியாகிவிடும் என்பது தவறான கருத்து. எனவே, எழுதுகிறவர்கள் எந்த மொழியில் எழுத உரிமை தரப்பட்டிருக்கிறதோ அந்த மொழியிலேயே கேள்வித் தாள்களும் தரப்பட வேண்டுமென்று வற்புறுத்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இதை முக்கியமான பிரச்சினையாகத்தான் இந்த அரசும் கருதுகிறது. விடை எழுதுகிற உரிமை அவரவர் மொழியில் எழுதத் தந்துவிட்டு வினாத்தாள்கள் மட்டும் ஆங்கிலத்திலும்

[1979 மார்ச் 10

இந்தியிலும் இருக்குமென்று சொல்வது அந்த விடை எழுதுகிறவர்களுக்கு உரிய முழு உரிமையைத் தந்ததாக ஆகாது என்ற அடிப்படையில் நம்முடைய மொழியில், தமிழ் மொழியில் வினாத் தாள்கள் அளிக்கவேண்டுமென்ற கருத்தை அரசு ஏற்றுக் கொள்கிறது. அதை இந்த அரசு வலியுறுத்தும்.

விருதுபெறும் ஆசிரியர்களுக்குப் பயணப்படி

* வினா எண். 324— திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் ; மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நல்லாசிரியர் விருதுபெறுகின்ற ஆசிரியர்கள் அவ்விருதைப் பெறுவதற்குச் சென்னை வந்து செல்வதற்கு வழங்கப்படும் பயணப்படி தமிழ் நாடு பயணப்படி விதியின்படி வழங்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இல்லை. அவர்களுக்கு அதற்கான தனி அரசாணைக்கேற்ப வழங்கப் படுகிறது. இரெயில் மார்க்கமாக வருகிறவர்களுக்கு இரண்டாவது வகுப்பு கட்டணமும், இரவில் பயணம் செய்பவர்களாகில் படுக்கைக் கட்டணம் உட்படவும் பேருந்தில் வருகிறபவர்களாயின் அதற்குள்ள கட்டணமும் பயணப்படியாக வழங்கப்படுகிறது. மேலும் ஒவ்வொரு ஆசிரியருக்கும் மொத்தபடியாக ரூ. 12-ம் தரப்படுகிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நல்லாசிரியர் விருது பெற்றவர்களுக்கு இரண்டாவது வகுப்புப் பயணப்படியும் 12 ரூபாய் படியாகவும் வழங்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதே நல்லாசிரியர்கள் எஸ்.எஸ்.எல்.சி. பள்ளித் தேர்வின்போது பேப்பர் திருத்துவதற்காக வந்தால் அவர்களுக்கு முதல் வகுப்புக் கட்டணமும் நாளொன்றுக்கு 8 ரூபாய் வீதமும் 6 நாளைக்குப் படியும் அளிக்கப்பட்டது. ஆனால் அவர்கள் நல்லாசிரியர்கள் விருது பெற்றார்கள் என்ற ஒரே காரணத்திற்காக ஏற்கெனவே பெற்றுவந்த படியைக் கூட பெறமுடியாமல் இருப்பதும் இப்போது கொடுப்பது முன்னுக்குப் பின் முரணாக இருக்கிறது என்ற நிலையும் இருப்பதால் அதைத் திருத்தியமைத்து முன்னாலே கொடுத்ததுபோலக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ' அரங்கநாயகம் ; தலைவர் அவர்களே, அவர்களுக்கு முதல் வகுப்புக் கட்டணம் தரப்படவேண்டுமென்ற யோசனையை இந்த அரசு பரிசீலிக்கும்.